சிவாஜி

சீனத்து சண்டை ஓய்கிறது!

ஆசிய நாடுகளிலிருந்து அமெரிக்கப் பிடிப்பு அகலும்!

சியாங்—விலகுவாரா ?

கீழ்த்திசை நாடுகளில் பழம்பெரு நாகரீகமும் காலாசாரப் பெருமையும் கொண்டவற்றில் இந்தியாவுக்கு இணையான புகழ் படைத்தது சீனம். உலகெங்கும் தோன்றி வளர்ந்துவரும் அரசியல் அமைப்பு மாற்றங்கள் சீனத்தின் சரித்திலும் குறைவில்லை. தேசீயப் புரட்சியின் மூலம் முடியரசைத் தகர்த்து குடியரசு கண்ட சைன மக்கள் மற்றொரு அரசியல் மாற்றத்திற்குப் பாத்திரராகும் காலம் விரைந்துகொண்டிருக்கிறது. அடுத்த நாடான ருஷியாவின் பொதுவுடமை சீனத்துத் தேசீய தீவிரவாதிகளைக் கவர்ந்திருப்பது இயற்கைதான். பொதுவுடமைக்காரர்கள் சைனா போன்ற பெரும் தேசத்தை தங்கள் ஆதிக்கத்தில் பெருவது ரஷ்ய அடிச்சுவட்டில் இது முதலாவதாக இருக்கும். கடந்த காலத்துச் சீன அரசியல் சரிதத்தின் சுருக்கம் கீழே தரப்படுகிறது :—

சீனாவில் நடைபெற்றுவரும் உள் நாட்டுச் சண்டைகள் ஓய்ந்து தெளிவான முடிவுகள் உருவாகும் நிலையில் இருக்கின்றன. சீனப் புரட்சிக்குப் பிறகு இன்றுவரையில் அதிகாரத்தில் இருந்துவரும் குவோமிண்டாங் கட்சிக்கும், அதிகாரத்தைக் கைப்பற்ற விரும்பும் சீன கம்யூனிஸ்ட் கக்ஷிக்கும் உள்நாட்டுச் சண்டை பல காலமாக நடந்து வருகிறது. இந்த கம்யூனிஸ்ட் கக்ஷி, குவோமிண்டாங் கக்ஷியிலிருந்து பிற்காலத்தில் பிரிந்து சென்ற தீவிர வாதிகளால் உருவாக்கப்பட்டதுதான்.

சீனாவில் இருந்துவந்த முடியரசுக் கொள்கையைத் தகர்த்து குடியரசை நிறுவுவதற்காக தேசீய வாதிகள் பெரும் புரட்சி இயக்கம் ஒன்றைத் துவக்கி வெற்றி பெற்றார்கள். இந்த தேசீய இயக்கத்தின் நிறுவனம் தான் குவோமிண்டாங் கக்ஷி. இந்தக் கக்ஷியினர் குடியரசை ஸ்தாபித்த பின்னர் அதன் தலைவராக விளங்கி வருபவர்தான் சியாங்-கே-ஷேக்

கம்யூனிஸ்ட்டுகள் நாட்டைத் தங்கள் வசம் ஆக்கிக்கொள்வதற்கென்று பெரிய ராணுவச் சண்டையே தொடங்கி நடத்தி வந்திருப்பதுடன் இன்று பெரும் அளவில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். தலைநகரத்தையே பிடித்துவிடும் அளவில் இருக்கிறார்கள்.

இந்த சமயத்தில் உள்நாட்டு அதிகார பீடம் பற்றிய ராணுவச் சண்டை முடிவுக்கு வரக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் கட்சிகளுக்குள் ஒரு சமரஸம் கண்டு கூட்டு மந்திரி சபை மூலம் அரசாங்க அமைப்பு ஏற்படக்கூடுமோ என்ற ஐயமும் சிலருக்கு உண்டு.

குவோமிண்டாங் கக்ஷியிலிருந்து சியாங்கே-ஷேக் ராஜிநாமா செய்வதன் மூலம், கம்யூனிஸ்ட்கள் ஒருவேளை சமரஸத்திற்கு இணங்கும்படி செய்ய முடியுமா என்ற அவலாசையும் சிலருக்கு ஏற்பட்டிருக்கிறது. வெற்றியின் எல்லைக்கு வந்துவிட்ட கம்யூனிஸ்ட்கள் சமரஸத்திற்கு இணங்கவேண்டிய அவசியம் இருப்பதாகக் கருதுவார்களா என்பது சந்தேகம்தான். கொஞ்சம் பாக்கியிருக்கிற போராட்டத்தையும் ஒரு மூச்சில் நடத்திப் பார்த்து ஜெயபேரிகை கொட்டிவிடவே அவர்கள் விரும்புவார்கள். எனவே சியாங்கே-ஷேக் ராஜிநாமா செய்வதன் மூலம் குவோமிண்டாங் கக்ஷிக்குப் புதிய மரியாதை தர கம்யூனிஸ்டுகள் முன்வந்துவிட மாட்டார்கள்.

அமெரிக்காவுக்கு சீன உள்நாட்டு அரசியலில் ஒரு அக்கறை இருப்பதற்கு அந்தரங்கமான காரணங்கள் இருப்பது மிகவும் தெளிவு. பிரிட்டனுக்கு அடுத்தபடியாக அமெரிக்கர்கள்தான் சீனாவின் பொருளாதார பலத்தைத் தங்கள் பிடிப்பில்

(12-ம் பக்கம் பார்க்க)

இதனுள்

போர்க்குழப்பம்

(சத்திரபதி)

சேனநாயகா தர்பார்

சிறுவர் மலர்

மந்திரக் கோட்டை

சிங்கக் குட்டி

டாம் ஜிம் ஜாக்

வேடிக்கை விளையாட்டுகள்

19-12-48

விலை அணா 2

மூன்றாம் அத்தியாயம்

போர்க் குழப்பம்

அஹமத் நகர சுல்தானின் முயற்சியால் லாகோஜிக்கும் மாலோஜிக்குமிடையே ஏற்பட்ட சமரசத்தின் விளைவாக அந்த ஹோலி பண்டிகை நடந்து ஆறு ஆண்டுகள் கழித்து மாலோஜியின் மைந்தன் ஷாஹஜிக்கும், லாகோஜியின் புதல்வி ஜீஜாவுக்கும் விவாகம் நடந்தது. குடும்ப வாழ்க்கையின் இனிமையை உயர்த்தச் சில வருஷங்களில் சாம்பாஜி என்னும் ஆண் குழந்தைக்கு ஜீஜா தாயானாள்.

அஹமத் நகர சுல்தானின் சேவையில் தந்தையைப் போலவே ஷாஹஜியும் சேர்ந்தார். சுல்தானது அன்புக்கும், கௌரவத்துக்கும் தந்தையைப் போலவே பாத்திரமாகி சமாதான காலத்தின் சாந்தியில் வாழ்க்கையைக் கடத்தி வந்தார்.

ஆனால் இந்த நிலை நீண்டநாள் நீடிக்கவில்லை. அந்த சகாப்தத்து அரசியலின் அதிர்ச்சி தட்சிணம் முழுவதிலும் ஏற்பட ஆரம்பித்தது.

தட்சிணத்திலிருந்த பாமினி ராஜ்யத்தின் ஐந்து சிறு அரசுகளும் வடக்கே டில்லியிலிருந்து அடிக்கடி பாய்ந்து வந்த படையெடுப்புகளாலும், பரஸ்பர முரண்களாலும் சிறுமையுற்றுப் பலமிழந்து கிடந்தன.

வெகு விரைவில் இந்த ஐந்து அரசுகளில் பீஜபுரியும், கோல்கொண்டாவும் தவிர மற்றவை இருக்கும் இடம் தெரியாமல் அழிவுற்றுப் போயின. பீஜபுரி சுல்தான் அஹமத் நகரத்தைத் தமது அரசில் சேர்த்துவிட்டார். இந்த இரண்டு அரசுகளும் கூட டில்லி மொகலாய சாம்ராஜ்யத்தின் கீழேயே உயிர் வாழ்ந்து வந்தன.

மொகலாய மன்னன் ஷாஜஹான் தட்சிணத்தில் மொகலாயருக்கிருந்த உரிமையையும், பலத்தையும் வற்புறுத்தும் நோக்குடன் அஹமத் நகரத்தின் பல பகுதிகளைத் தன் ராஜ்ஜியத்துடன் சேர்த்துவிட்டதோடல்லாமல் இன்னும் தெற்கே கவிந்து பெரும் படையுடன் போர் முரசம் கொட்டி வந்தான்.

ஃ ஃ ஃ

மொகலாய சக்ரவர்த்தி ஷாஜஹான் தட்சிணத்துள் நுழைவதற்குச் சிறிது காலத்துக்கு முன்பு ஒரு நாள் பீஜபுரி நகரத்தில் சுல்தானது அரண்மனை வாயிலில் அவரது பேட்டிக்காக ஒரு மகாராஷ்டிர வீரர் காத்து நின்றார். சுல்தான் கூப்பிட்டனுப்பியதும் உள்ளே நுழைந்த அந்த வீரரது மனத்தில் கால வேகத்தின் எதிரொலி படர்ந்து பரவிற்று. தாம் வந்த காரியத்தை நினைவுறுத்திக்கொண்டு சுல்தானது முன்னிலையில் மண்டியிட்டு நின்றார்.

“சுல்தானிடம் ராணுவ சேவை செய்யும் பாக்கியம் வேண்டி வந்தேன்;” என்றார் வீரர்.

“அஹமத் நகரமா?” என்று கேட்டார் சுல்தான்.

“ஆம், சுல்தான். தந்தைக்கு அஹமத் நகர சுல்தான் வழங்கிய மான்யம் எனக்கும் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. குதிரைப் படையில் முக்கிய பதவி வகித்து ஊழியம் செய்து வந்தேன். ஆனால் காலவேகம்.........”— இந்த இடத்தில் மராத்திய வீரருக்கு நெஞ்சையடைத்தது.

“அஹமத் நகரத்திடம் அத்தனை பற்று உண்டா?” என்று கேட்டார் சுல்தான்.

“கடமை......” என்று தயங்கினார் மராத்தியர்.

“சரி, என்ன வேண்டும்?”

“தங்கள் படையில் ஒரு இடம் வேண்டும்.”

“சரி, சந்தோஷம். உமது மான்யமும் ஊர்ஜிதமாகும். நீர் போகலாம்.”

அழிந்துபோன அஹமத் நகரத்தை ஆட்கொண்டிருந்த பீஜபுரி அந்த மராத்தியருக்கும் இன்னும் எண்ணற்ற பல மலை நாட்டு வீரருக்கும் புகல் கொடுத்ததில் அதிசயமில்லை. ஏனெனில் வடக்கே இருந்து மொகலாயர் பயமுறுத்தல் பயங்கரமாக இருந்தது. விந்திய பர்வதம் வடவர் படையைத் தேக்கி நிறுத்தித் தட்சிணத்தின் சிறு அரசுகளைப் பாதுகாக்கும் பான்மை படைத்திருக்கவில்லை!

பேட்டி முடிந்த பிறகு பீஜபுரியிலிருந்து குதிரை ஏறிக் காற்றாய்ப் பறந்த மராத்திய வீரர் நேரே வடக்காகத் தம் பரியைச் செலுத்திப் பல நூறு மைல்கள் கடந்தார். வழியெங்கும் மக்கள் குழப்பத்துடன் அலைந்து வருவதையும் நெருங்கி வந்து கொண்டிருந்த மொகலாய குதிரைப் படையின் குளம்போசை தம் காதில் இடி முழக்கம்போல் கேட்பதாகக் கூறுவதையும் கண்டார்.

மூன்று நாட்கள் இடைவிடாத பிரயாணத்தின் பிறகு அந்த வீரர் தம் இருப்பிடம் அடைந்தார்.

குதிரையை விட்டுத் தமது மாளிகையின் வாயிலில் இறங்கியதும் அவர் மனைவி சோர்ந்த முகத்துடன், அவரை வரவேற்றாள். பீதியும், மன அதிர்ச்சியும் அவளை மிகவும் வாட்டியிருந்தன.

“மொகலாயன் கத்தி நம் கழுத்தை நெருங்கி வருகிறது” என்றாள் அவள்.

பக்கத்தில் நின்றிருந்த சிறு பாலகனை அவள் அணைத்துக் கொண்டாள்.

வீரர் தமது மூன்று நாளைய பிரயாணத்தின் அயர்வையும் மறக்க முயல்வதுபோல் நெற்றிக் கண்ணைத் தேய்த்துக்கொண்டே பாலகனையும், மனைவியையும் மாறி மாறிப் பார்த்தார். அவர் மனமும் குழம்பித்தான் இருந்தது.

“யுத்தம் நம்மைத்தேடி வருகிறது. புகுந்த பூமியில் நமக்குக் கிடைத்த உரிமைகளுக்காகவாவது போராட வேண்டாமா?” என்று வீரர் தமக்குள் ஏதோ சொல்லிக்கொண்டார்.

அன்று மாலை மூவாயிரம் குதிரை வீரர் அடங்கிய ஒரு படையின் தலைமைதாங்கி அந்த வீரர் இன்னும் வடக்கு நோக்கிப் பதறிச் சென்றார், கவிந்து வந்த மொகலாய சேனையைத் தேக்கி நிறுத்த! கிளம்பும்போதே நம்பிக்கையற்ற கடமை யுணர்ச்சிதான் அவரை ஆட்கொண்டிருந்தது.

ஒருவாரம் கழித்து ஒருநாள் நள்ளிரவில் அவரது மாளிகையின் வழியே தட தடவென்ற பயங்கரமான குளம்போசை கேட்டது. ஏராளமான குதிரைகள் பாய்ந்து பறந்து ஓடின. பாலகனுடன் தனித்திருந்த அந்த மராத்திய மாது பலகணி வழியே பயத்துடன் பார்த்தாள். குழப்பத்திலும், தோல்வியிலும் வாடியிருந்த சேனையின் பின் வாங்குதலாகவே அந்த அதிர்ச்சி அவளுக்குத் தோன்றிற்று.

தூர இருந்து ஒரு உருவம் குதிரையின் மீது வேகமாக மாளிகை வாயிலை நோக்கி வந்து கொண்டிருந்தது. அந்த உருவம் தன் கணவன்தான் என்பதையும் தன் ஊகம் சரியாகப் போய் விட்டதையும் அவள் உணர்ந்தாள். விரைவில் சென்று வாயிற் கதவைத் திறந்தாள்.

அந்த வீரர் குதிரையை விட்டுக் கீழே இறங்கவில்லை. படபடப்புடன் “சீக்கிரம். அவனைக் கொண்டுவா ஒன்றும் பேசாதே. காலவேகம்......” என்று பதறினார்.

அவளுக்கு இடி இடித்தது போலிருந்தது. தூங்கிக்கொண்டிருந்த பாலகனை அப்படியே தூக்கிக்கொண்டுவந்து கணவனிடம் சேர்த்தாள். கண்ணில் நீர் மல்க அவள் அசையாது நின்று கொண்டிருந்தாள். பாலகன் குதிரையின் மேல் தந்தையின் கையணைப்பில் அமர்ந்திருந்தான்.

சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு “நான் கர்ப்பிணி” என்றாள் அவள்.

“காலவேகம்......” என்று குழப்பத்துடன் முனகிக் கொண்டே குதிரையைத் தட்டிப் பறந்தார் வீரர். அவரது உருவம் விரைவில் இருளின் குகைக்குள் புகுந்து மறைந்தது.

(தொடரும்.)

REGD. INSIST ON REGD.
Original Wheel Mark Diamonds
BIG BAZAAR — TRICHINOPOLY.

CHENNIS SPECIAL DIAMONDS
(FAMOUS FOR BRILLIANCE)
REGD. CHENNI RADHAKRISHNAN & CO., REGD.
BIG BAZAAR. TRICHINOPOLY.

திருச்சி வெலிங்டனில்
18—12—48 முதல்
மகத்தான 4-வது வாரம்
T. S. துரைராஜ்
நடிக்கும்
பிழைக்கும் வழி
—— நடைபெறுகிறது ——

சிவாஜி

ஆசிரியர்:—திருலோக சீதாராம்

கோட்டை 14 | திருச்சி, 19—12—48 சர்வதாரி-ஞ மார்கழி-மீ, 5-உ | முற்றுகை 3

திருச்சி ராக்ஸியில்
18—12—48 முதல்
T. R. மஹாலிங்கம்
K. L. V. வஸந்தா
N. S. கிருஷ்ணன் T. A. மதுரம்
நடித்த
பூலோக ரம்பை
மகத்தான 2-வது வாரம்
—— நடைபெறுகிறது ——

ஈழத்தில் இந்தியரின் பிரஜா உரிமை

சுந்தரலிங்கம் ராஜினாமா

இந்தியாவும் இலங்கையும் பரஸ்பரம் சுமுக உறவு மேற்கொண்டு வாழவேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டவர்களுக்கு ஈழத்தை இன்று ஆளும் சேனநாயகா மந்திரி சபையின் போக்கு மனவருத்தம் உண்டாக்கத்தான் செய்திருக்கிறது. தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளின் பிறகும், பண்டித நேரு—சேனநாயகா சந்திப்பின் பிறகும், இந்திய மக்களது தொடர்ந்த கோரிக்கைகளின் பிறகும் கூட சேனநாயகா மந்திரிசபை அசைந்து கொடுக்கவில்லை. தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று இருந்து வருகிறது.

சேனநாயகா லண்டன் டொமினியன் பிரதமர் மகாநாட்டுக்குச் சென்று திரும்புங்கால் சென்னையில் இறங்கியிருந்த போது இலங்கை இந்தியர் நலனில் தமக்கு அக்கரை இருப்பதாகவும், கசப்பை ஊட்டிய இலங்கை இந்தியர் பிரஜா உரிமை மசோதாவை மாற்றியமைக்கப் போவதாகவும் கூறினார். ஆனால் அப்படி ஒன்றும் செய்யக் காணோம்.

இதற்கு நேர் மாறாக ஈழத்து அரசாங்கப் பிரமுகர்களும், மந்திரிகளும் விரும்பத்தகாத அறிக்கைகளில் தமது நெஞ்சினின்று விஷத்தைக் கக்கியிருக்கிறார்கள்.

சேனநாயகா மந்திரிசபையின் போக்கே சிறிதும் பொறுக்காமல் சுந்தரலிங்கம் என்னும் வியாபார மந்திரி இலங்கை மந்திரி சபையினின்று ராஜினாமா செய்திருப்பது அப்பட்டமான முறையில் நிலைமையைத் தெளிவுபடுத்தியிருக்கிறது.

திரு சுந்தரலிங்கம் பிரதமர் சேனநாயகாவுக்கு இந்த மாத ஆரம்பத்தில் எழுதிய கடிதத்தில் இந்திய பிரதமர் பண்டித நேருவுக்குப் பிடிக்காத முறையில், இந்திய மக்களது கௌரவத்தை பாதிக்கும் வகையில், பிரஜா உரிமை மசோதாவில் கண்டுள்ள சில ஷரத்துக்கள் அமைந்திருப்பதை எடுத்துக் காட்டினார். ஆனால் சேனநாயகாவின் மனதை இது சிறிதும் மாற்ற



பிரிட்டிஷ் ஹைகமிஷனர் டில்லியில் அளித்த விருந்துபசாரத்தில் பண்டித நேரு கலந்துகொண்டார்.

வில்லை. இதன் காரணமாக சுந்தரலிங்கம் மந்திரிசபையினின்று விலகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

பிரதமர் சேனநாயகாவும், பந்தரநாயகா போன்றவர்களும் தங்கள் மனப்பான்மையை ரொம்ப பகிரங்கமாகவும், அசங்கியமான முறையிலும் அடிக்கடி வெளிக்காட்டியிருக்கிறார்கள். இலங்கையில் ரத்தம் சிந்தி உழைக்கும் இந்திய ஊழியர் பற்றி சமீபத்தில் சேனநாயகா பேசிய பேச்சு ரொம்பவும் முரட்டுத்தனமாகவும், ராஜரீகம் தெரியாத முறையிலும் அமைந்திருந்தது.

சேனநாயகாவை நாம் பதிலுக்குக்குத்திக்காட்டுவது ரொம்பக் கஷ்டமான காரியமல்ல. அவரது பழைய கொள்கைகளையும், பேச்சையும் ஞாபகமூட்டினால் அதுவே போதுமானது. அந்தக் காலத்தில் இலங்கை சுதந்திரமடையுமுன்பு இந்தியர் நலனில் ரொம்ப அக்கரைகாட்டினார் சேனநாயகா! ஆனால் இன்று......! அன்று செய்தது வெறும் பசப்பலா? இந்தக் கேள்வியை நம்மால் கேட்காமலிருக்க முடியவில்லை.

சேனநாயகா செய்வது போதாதென்று கனம் ஜி. ஜி. பொன்னம்பலம் தமது பழைய நிலையிலிருந்து தலைகீழாகக் கர்ணம் அடித்து தமது பிரதமரது பாட்டுக்கு ஒரே இரைச்சலாகப் பக்கவாத்தியம் வாசிக்கிறார். இந்தக் கூற்றை என்னென்று சொல்வது.

சேனநாயகாவாவது சிங்களவர். ஆனால் பொன்னம்பலம் தமிழர். எனவே, இந்திய—இலங்கை உறவு எப்படி இருக்கவேண்டும், இந்தியர்களுக்கு ஈழத்தில் கொடுக்கப்பட வேண்டிய மரியாதையும், உரிமையும் என்ன — இவைபோன்ற விஷயங்களில் சேனநாயகாவைவிட

சேனநாயகா தர்பார்

அதிகமாகத் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். ஆனால் சேனநாயகிஸத்துக்கு பொன்னம்பலிஸம் ஒரு அடி அதிகமாகவே மேலே பாய்கிறது!

இந்தியர்களுக்கு இலங்கையில் ஏதோ விசேஷ சலுகை கேட்கப்படுவதாக நாயகாக்களும், அம்பலங்களும் பசப்புவதெல்லாம் வெத்துவேட்டு. பண்டித நேரு சேனநாயகாவுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளில் இவ் விஷயத்தைத் தெளிவாக வற்புறுத்தியிருக்கிறார்.

இலங்கையின் இன்றைய சுக நிலைக்கு அஸ்திவாரம் போட்டவர்கள் இந்தியர் என்பதை யாரும் மறுக்க முடியாது. உடல் வலியும், உள் வலியும் சாய்த்து உழுது பயிரிட்டு இந்தியர் செழிக்கவைத்த மண்ணிலேதான் இன்று சேனநாயகாக்கள் உலவிவருகிறார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

சேனநாயகாவின் தீர்மானத்துக்கு ஈழத்துப் பிரதிநிதி சபையில் இருந்த எதிர்ப்பு பெரும்பான்மையாயில்லாவிடினும் பலமாக இருந்தது. சேனநாயகா தமது கொள்கையை மாற்றிக் கொள்ள இந்த எதிர்ப்பே போதிய எச்சரிக்கையாகும்.

திருச்சி ஸ்டார் டாக்கீஸ்

இன்னுமா பார்க்கவில்லை?
இன்றே பாருங்கள். நிகரற்ற ஆதரவுடன்
20-12-48 முதல் 8-வது வாரமாக நடைபெறும்

ஜுபிடர் **மோகினி** தமிழ் படம்

V. N. ஜானகி, மாதுரிதேவி, T. S. பாலையா, புளிமூட்டை, லலிதா, பத்மினி நடித்தது

தினசரி 2-காக்ஷிகள் மாலை 6, இரவு 10-மணிக்கு
சனி, ஞாயிறுமட்டும் மாட்னி பகல் 2-மணிக்கு

அனுபவ ஞானியின் குறிப்புகள்

திருலோக சீதாராம்

பிள்ளைப் பிராயத்தில்

ஸ்ரீமான் நாயுடு அவர்களைப் பற்றியோ, அவர் வாழ்வில் கண்டறிந்த அனுபவங்கள் கொண்டிருக்கும் சித்தாந்தங்களைப்பற்றியோ தெரிந்து கொள்ள விரும்புவோருக்கு ஆதார பூர்வமான தஸ்தாவேஜுகளே அவரிடம் உள்ளன.

அறிவுச்செல்வமும் ஆழ்ந்த அனுபவமும் படைத்த நாயுடு அவர்களைப்போன்ற ஒருவரின் சரிதத்தை அவருடைய வாழ்நாளிலேயே மக்கள் தெரிந்து கொள்வது மிக்க பயன் தரக் கூடியதுதான் என்பதை நான் அறிவேன். ஆயினும் அத்தகைய விரிவான சரித்திரத்தை அவருடைய வாழ்க்கை வளர்ச்சியை ஒட்டியதாகவும் அதன் பொருளை விளக்குவதாகவும் எழுதும் மகத்தான வேலை என்னைப்போன்ற பத்திரிகைக் காரனால் ஓடிக் கொண்டே செய்வது சாத்தியமில்லை. நாயுடு அவர்களின் முழுச் சரிதக் கோவையைத் தீட்ட விரும்பும் ஆசிரியன் அவருடன் சல்லாபித்தும் அவருடைய வாழ்வின் போக்கை அருகிருந்து கவனித்தும் அவருடைய கடிதப்போக்குவரத்துகள் பைல்கள் இவற்றை ஆராய்ந்தும் அவரைச் சரித்திர நாயகராக்கும் செய்திகளை விருப்பு வெறுப்பின்றிச் சேகரிக்கவும் வேண்டும். பல வருடங்களை இதற்கென்றே செலவிட்டாலன்றி உருவாக்க முடியாத இந்தச் செயலை மேற்கொள்ள சரித்திர உணர்ச்சியும், குணகுண விமர்சனப்பாங்கும் எழுதுவோனின் இதயச்சாயை பட்டுக்கலக்காதபடி நிகழ்ச்சிகளை உள்ளபடி சித்தரிக்கும் நேர்மையும், இவ்வளவுக்கும் வேண்டிய பொறுப்பும், பொறுமையும், நேரமும் படைத்த பாஸ்வெல் ஒருவர் பிறந்தாலன்றி இது நடவாத காரியம். அப்படி ஒருவர் தோன்றி நாயுடு அவர்களின் சரித்திரம் தமிழ் மக்களுக்குக் கிடைத்தால் தமிழ் நாட்டுத்தொழில் ஊக்கத்துறையின் சரித்திர நாயகரை மக்கள் அறிந்து கொள்வார்களல்லவா! நீல்கன் பெருமாள் என்ற ஆசிரியர் ஆங்கிலத்தில் சிறு அளவில் நாயுடு அவர்களின் சரிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதன் தமிழ் பெயர்ப்பு விரைவில் வெளி வரக்கூடும்.

இன்று ஆனந்தரங்கம் பிள்ளை அவர்களைப்பற்றி அவருடைய நாட்குறிப்புகள் நம்முடன் பேசுகின்றன. பின் சந்ததியார்கள் நாயுடு அவர்கள்பற்றி அறிய எவ்வளவோ சிரமப்படவேண்டியிருக்குமென்று அஞ்சுகிறேன். பழகக்கிடைத்த ஒருசில சந்தர்ப்பங்களில் அறிய முடிந்த சிலவற்றையேனும் இங்கு குறித்து வைத்தால் அந்த அளவுக்குப் பயன் படாமல் போகாது என்ற நம்பிக்கையினால்தான் இந்தத்தொடர் தோன்றியிருக்கிறது.

எனவே இனிவரும் குறிப்புகளில் எழுதுவோனுடைய எண்ணத்தின் நிழல் கூடப்படாதவாறு நாயுடு அவர்களின் வாயிலாகவே அவருடைய சித்தாந்தங்கள், அனுபவங்கள் இவற்றைத்தருகிறேன்.

பாடசாலையில் எப்போதோ சிறுபோதில் ஒரு மூன்று வருஷம் மணலில் முறைவைத்துப் படித்தது தவிர ஒழுங்காகப் படித்ததில்லை. பிற்காலத்தில் அவரிடமிருந்து வெளிப்பட்ட சாதாரணமான ஆற்றல் சிறு பிராயத்தில் பிள்ளைச்சிறு குறும்புகளில் அவரை இயக்கிப் பெரிய "வால்" என்று கண்டோர் அஞ்சி ஒதுங்கச் செய்ததில் வியப்பில்லை. ஆசிரியர் கண்களில் மண்ணைத்தூவிவிட்டு, வைக்கோல் வண்டிக்குத் தீயிட்டு விட்டுத் திரிந்துகொண்டிருந்தால் ஊரார் என்ன சொல்லமாட்டார்கள்! தந்தையே தன் மகனை வீட்டுக்கு அழைக்காமல் தொலைதூரத்தில் விவசாய வேலைகளில் ஆட்களுடன் சேர்த்து அனுப்பிவிட்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இப்படி அவர் கடுமையான வேலைகளையும் தனது வால் தனத்தையும் சேர்த்துச் சுமந்து திரிந்தகாலத்தில்தான் அவருக்கு விஞ்ஞானத்துறையில் தற்செயலாக ஒரு கவர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

அந்தப்பக்கத்தில் சர்வேயராக இருந்த ஒரு வெள்ளைக்கார துரை மோட்டார் சைக்கிளில் உத்யோக அலுவலாக ஒரு சமயம் வர நேர்ந்ததுதான் சிறுவன் துரைசாமியின் வாழ்வில் புதிய பாதைக்கு ஒரு திருப்பமாக இருந்திருக்கிறது.

அதற்கு முன்பு அவ்வளவு பயங்கரமான வெண் குஷ்டம் பிடித்த நோயாளியை சிறுவன் துரைசாமி பார்த்திருக்கவில்லையாகையால் ஒரே வியப்புப் பொருளாக அந்த வெள்ளை மனிதன் விளங்குகிறார். பழுதாகி நின்று விட்ட அந்த வண்டியை ஓட்டுவதற்குக் கந்தல் துணியும் மண் எண்ணையும் தேவைப்பட்டது. சூழ்ந்திருந்து வியப்புடன் வேடிக்கை பார்த்த அந்தக்குப்பத்து மக்களின் கூட்டத்தில் கூர்ந்த பார்வையுடன் "வெண் குஷ்ட"ப் பேர்வழியையும் அவரின் வேதனையையும் கவனித்துக் கொண்டிருந்த சிறுவன் துரைசாமி உதவிக்கு முன் வந்தார்.

வண்டி பழுது பார்க்கப்பட்டு அதை விட்டுப் புறப்பட்டு விட்டது. ஆனால் அந்த வேடிக்கையான யந்திர ஊர்தி சிறுவனின் மனதில் பெரிய ஆவலை விதைத்து விட்டுப் போய்விட்டது.

எப்படியாவது நகரத்திற்குச் சென்று அந்தமாதிரி ஒரு வாகனம் ஒன்றை வாங்கி அதில் சவாரி செய்து பார்த்துவிட வேண்டுமென்ற அடக்க முடியாத ஆவல் எழுந்தது அந்த இளம் உள்ளத்தில். கோவை நகரத்துக்கு முதன் முதலில் வந்த துரைசாமிக்கு மிகப்பெரிய ஆச்சர்யம் ரயில் வண்டி வடிவத்தில் காத்திருந்தது. பெரிய தண்டவாளங்களில் நீண்ட குழாய்களில் புகை கக்கிக்

(11-ம் பக்கம் பார்க்க)

டில்லித் தமிழர்

டில்லித் தமிழர் சங்கத்தில் பாரதி விழா இந்து மகாசபா ஹாலில் சென்ற டிசம்பர் 5-ந் தேதி மாலை நடைபெற்றது. திரு. கிருஷ்ணசுவாமி பாரதி அவர்கள் தலைமை வகித்தார் பாரதியாரின் கவிதைகளின் சிறப்புகளைப்பற்றி ரொம்பவும் உருக்கமாகவும் அழகாகவும் மேற்கோளுடனும் பேசினார். பிறகு டாக்டர் பி. சுப்பராயன் "நானறிந்த பாரதி" என்பதைப்பற்றி சுருக்கமாகப்பேசினார். பிறகு தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவர்களும் பேசினார்கள். சில பேச்சுபோட்டிகளும் நடந்தன. மூன்று பரத நாட்டியங்கள்நடைபெற்றன. குமாரி விசாலாக்ஷி அவர்களின் இன்னிசைக்கச்சேரியும் நடந்தது. பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. கடைசியாக கும்மி கோலாட்டம் முதலியவைகள் நடைபெற "வாழிய செந்தமிழ்" என்ற கீதத்துடன் விழா இனிது முடிந்தது.

மேற்படி விழாவிற்கு ராஜாஜியின் பிரதிநிதியாக அவரது குமாரர் ஸ்ரீ நரஸிம்மன் வந்திருந்தார். சுமார் 500 தமிழர்கள் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஃ ஃ ஃ

சென்ற டிஸம்பர் மாதம் 4-ந் தேதி கப்பல் ஓட்டிய தமிழன், திரு, வ. உ. சிதம்பரம் பிள்ளையின் தினத்தை டில்லித் தமிழ்ச் சங்கத்தார் அமோகமான முறையில் சங்க கட்டிடத்தில்கொண்டாடினார்கள். விழாவுக்கு திரு. வி. ஐ. முனிசாமி பிள்ளை (அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்) அவர்கள் தலைமை வகித்தார். தலைவர் முனிசாமிப் பிள்ளை அவர்கள் வ. உ. சி யின் தியாகத்தைப்பற்றிப் பேசினார். பின்னர் திரு. எம். அனந்தசயனம் அய்யங்கார் அவர்கள் மிக சுருக்கமாக வ. உ. சி. யின் தேசியப்பற்று தலைப்பற்றிப் பேசினார். திரு. காமராஜ் அவர்கள் இந்த விழாவில் சில அசௌகரியங்களால் கலந்துகொள்ள முடியவில்லை. மற்றும் பலர் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

80 வயது சினிமா நக்ஷத்திரம்

ஒலிங் ஸ்டுடியோ அதிகாரிகள் 80 வயதான மேரி மக்நீல் என்ற மாதை தங்கள் படங்களில் நடிப்பதற்காக நியமித்துள்ளனர். இவர் 'விஸ்கி மயம்' என்ற படத்தில் நடிப்பதற்கு ஒரு 'எக்ஸ்ட்ராவாக' தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒத்திகையின்போது இவரது நடிப்பு அபாரமாக இருந்ததால் அப்படத்தில் இவருக்கு ஒரு முக்கியமான பாகம் கொடுக்கப்பட்டது. காலையில் ஸ்டுடியோவுக்கு போகுமுன்னர் மேரி பால் கறப்பதும் மற்ற வீட்டு வேலைகளையும் செய்து முடித்து விடுகிறார். காமிராவுக்கு முன் நடிப்பது அவருக்கு அதிக சந்தோஷத்தை அளிக்கிறது.

சென்ற 9—12—48-ம் தேதியன்று காலை 10—45 மணிக்கு நடந்த திருச்சி ஜில்லா போர்டு விசேஷ கூட்டத்தில் மகாத்மா காந்தி ஞாபகார்த்த நிதிக்காக ஜில்லாபோர்டிலிருந்து (கடந்த 1-11-48-ம் தேதியன்று நடந்த ஜில்லாபோர்டு மீட்டிங்கில் ரூ. 5000 நன்கொடைகொடுப்பதாக தீர்மானித்ததை மாற்றி) ரூபாய் 10,000 நன்கொடை கொடுக்க தீர்மானம் நிறைவேறியது.

TRADE MARK
GVP
குவாலிடி காப்பி
திருச்சி.

உழுதலின்றி விவசாயம்

✷

உலகின் விவசாய முறைகளையே புரட்சிகரமாக மாற்றக் கூடிய சோதனைகள் இங்கிலாந்தில் நடந்துவருகிறது. நியூமன் டர்னர் என்ற ஸாமர்செட் குடியானவர் தனது நிலத்தை உழுவதையே விட்டு விட்டார். இதன் பலனாக முன்பைக்காட்டிலும் அவரது நிலங்களில் விளைச்சல் நன்றாக இருக்கிறது என்று அவர் கூறுகிறார்.

அவர் நிலத்தை உழுவதற்குப் பதிலாக நன்றாக கிளறிவிட்டு முந்தைய விளைச்சலிலிருந்து வளரும் முளைகளை வெட்டிவிடுகிறார். அவன் பின்னர் விதைகளை நடுகிறார். அடுத்தபடியாக நடைபெறுவதைப்பற்றி மிஸ்டர் டர்னர் கூறுவதாவது "கார் காலம் முழுவதும் புல் பூண்டுகள் தான் செழுமையாக வளர்ந்தன, ஆகவே வசந்த காலத்தின் போது மறுபடியும் விதை நட வேண்டி வருமோவென்று நான் அஞ்சினேன். ஆனால் வசந்த காலம் வந்ததும் கோதுமைப் பயிர் கிடு கிடுவென்று வளர ஆரம்பித்தது. புல் பூண்டுகளெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. நான் பயிரிட்ட கோதுமைதான் நன்றாக வளர்ந்தது.

"கலப்பையை உபயோகப் படுத்தாதபோது இயற்கையே பூமிக்கு வேண்டிய சாரத்தை அளிக்கிறது" என்று மிஸ்டர் டர்னர் கூறுகிறார். நிலத்தின் மேல் பாகத்தில் அழுகிப்போன புல் பூண்டுகளும் இதர தாவர அசுத்தங்களும் கனமாகப் படிந்து பூமியை சத்துள்ளதாகச் செய்துவிடுகின்றன. இதன் கீழ் ஒரு அடி ஆழத்தில் கற்கள் நிரம்பிக் கிடந்தாலும் பரவாயில்லை. நிலத்தை உழாமல் விதை விதைக்கும் முறைப்படி செய்யவேண்டியது என்னவென்றால் பூமியை சிறிதளவே கிளறிவிட்டு விதையை நட்ட பிறகு அங்குள்ள தாவர அசுத்தங்களினால் அவற்றை மூடிவிட வேண்டும்.

இந்த முறைப்படி ரசாயன உரங்களும், புல் பூண்டை ஒழிக்கும் மருந்துகளும் பூச்சிகொல்லி சாதனங்களும் இனி உபயோகிக்கவேண்டிய அவசியமில்லை என்றும் மிஸ்டர் டர்னர் கூறுகிறார்.

இம் முறை தற்செயலாக கண்டு பிடிக்கப்பட்டது. உழ மறந்து விடப்பட்ட நிலப் பகுதியொன்றில் விளைச்சல் நன்றாக இருந்ததால் இம்முறை மேலும் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. தற்போது அநேக பிரிட்டிஷ் குடியானவர்கள் இந்த முறையை கையாண்டு வருகின்றனர். காய்கறி தோட்டங்களிலும் நல்ல பலன்களுடன் இம்முறையை கையாளலாம் என்றும் கூறப்படுகிறது.

✷

பட்டினியிலிருந்து நம்மை டீ எப்படிக் காப்பாற்றுகிறது?

அயல்நாட்டு நாணயச் செலாவணி நம் நாட்டுக்கு இன்று மிகவும் அவசியமாக இருக்கையில், நாம் ஏற்றுமதி செய்யும் 40 கோடி பவுண்டு தேயிலை, அவசியமான உணவுப் பொருள்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய ஏராளமான தொகையை அளிக்கிறது. டீ நம் நாட்டு கலாசாரத் தூதர் மட்டுமல்ல, பட்டினியைத் தடுக்க உத்திரவாதமும் அளிக்கிறது. ஏற்றுமதித் தொழிலில் இரண்டாவதாக நிற்கும் டீத்தொழில் நாட்டின் பொருளாதாரத் துறையில் பிரதான ஸ்தானம் வகிக்கிறது.

டீயைப்பற்றிய சில உண்மை விவரங்கள்

- ★ ஏழு லக்ஷம் ஏக்ரா நிலத்தில் வருஷமொன்றுக்கு 54 கோடி பவுண்டு டீ உற்பத்தி செய்கிறோம்.
- ★ இத் தொழிலில் 10 லக்ஷம் ஆண்களும் பெண்களும் ஈடுபட்டிருக்கிறார்கள்.
- ★ உள் நாட்டில் அருந்தும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 3 அணா வரியும், ஏற்றுமதி செய்யப்படும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 4 அணா வரியும் சர்க்காருக்குக் கிடைக்கிறது. நாட்டு கஜானாவுக்கு வருஷமொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ. 13 கோடி வரும்படி கிடைக்கிறது.
- ★ மேலும் டீ கம்பெனிகள் செலுத்தும் வருமான வரி மூலமாக சர்க்காருக்கு கணிசமான தொகை கிடைக்கிறது.

டீ

ஒரு மகத்தான இந்தியக் கைத்தொழில்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

லிப்டன்ஸ்

என்றால் முதல்தரமான டீ

LTK-137

சிவாஜி

அறவலி காத்து நாளும் அன்னையின் பணிக்கென்றே நம்
உறையிலே உறங்கும் வீரம் உருவினோம் ஓங்கிவிட்டோம்.

திருச்சி. 19—12—48

மொழிவாரிப் பிரிவினை

தார் கமிஷன் என்ற பெயரில் இந்திய அரசியல் நிர்ணயசபையால் நியமிக்கப்பட்ட மொழிவாரிப் பிரிவினைக் கமிஷன் பல்வேறு பிராந்தியங்களுக்கு சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுத் தன் முடிவை ஒரு அறிக்கையின் மூலம் தெரிவித்திருக்கிறது. இந்தியாவை மொழிவாரி மாகாணங்களாகப் பிரிக்க வேண்டும் என்ற கொள்கையின் எதிரொலியாகவே இக்கமிஷன் நியமிக்கப்பட்டது. இந்த கமிஷன் நியமிக்கப்பட்டு சரியாக ஒரு வருஷம் ஆகிறது.

இந்தியாவின் தற்போதைய மாகாணங்கள் சரியான நிர்வாக அமைப்புகளல்ல என்ற கருத்தும், இவற்றை மாற்றி மொழிவாரி அடிப்படையில் சீரமைக்க வேண்டுமென்ற கொள்கையும் வெகு காலமாக காங்கிரஸ் கட்சிக்கு இருந்துவருகிறது. இந்த உண்மையை இவ்வறிக்கை ஒப்புக் கொள்கிறது.

அறிக்கையின் முடிவு “தற்போதைய சந்தர்ப்பங்களில் இந்தியாவை மொழிவாரி மாகாணங்களாகப் பிரிப்பது உசிதமல்ல” என்பதேயாகும். இவ்வறிக்கை வெளிவருவதற்கு முன்னரே பலர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அறிக்கையை விருப்பு வெறுப்பின்றிப் படித்தவர்களுக்கு அது கண்டிருக்கும் முடிவு அதன் பரிசீலனைகளுக்கு முன்பே ஏற்பட்ட முடிவென்று தெளிவாகப் புலப்படும். மொழிவாரிப் பிரிவினை விஷயம் பிரஸ்தாபிக்கப்பட்ட ஆரம்ப காலத்திலேயே மத்திய அரசாங்கத்தின் தரப்பில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் இந்த உண்மையை வற்புறுத்துகின்றன. எனவே கமிஷன் நியமிக்கப்பட்டது வெறும் சமாதானமென்றே முடிவுகட்ட வேண்டியிருக்கிறது.

கமிஷன் கண்டிருக்கும் முடிவு ‘தற்போதைய சூழ்நிலை’யில் நியாயமானதாகவும், ஒப்புக்கொள்ளத் தக்கதாகவும் இருக்கலாம். ஆனால் இதற்காக அது கூறியிருக்கும் காரணங்கள் தர்க்க ரீதியில் ஒப்புக்கொள்ள முடியாதவையாகவும், விஷயத்தைக் குழப்புவதாகவும் இருக்கின்றன.

எடுத்த எடுப்பில் கமிஷன் அறிக்கை கூறுகிறது “மாகாண அமைப்புகளைச் சீரமைக்க வேண்டுமென்பது நியாயமே. சீரமைக்காவிடில் பெருத்த ஏமாற்றம் ஏற்படும் என்பதை ஒப்புக்கொள்கிறோம். ஆனால் மொழிவாரி மாகாணப் பிரிவினை இந்திய தேசீய ஐக்கியத்துக்குக் குந்தகம் விளைக்கும். நாடு சிதறுண்டு போகும்” என்று.

மொழிவாரி மாகாணச் சீரமைப்பையும், இந்தியதேசீய ஒருமையையும் ஒன்றுக்கொன்று விரோதமாக ஏன் கருதவேண்டும் என்பது நமக்கு விளங்கவேயில்லை. அப்படிப் பார்ப்பதாயிருந்தால் இந்தியா மாகாணங்களாகப் பிரிந்திருப்பதே தேசீயத்துக்குக் குந்தகம் விளைப்பதாகக் கூற முடியாதா?

இப்பொழுது மாகாணங்கள் ஒருமுறையில் அமைந்திருக்கின்றன. இதை மொழிவாரி அடிப்படையில் புதிய முறையில் மாற்றியமைக்க வேண்டும். இந்தச் சீரமைப்பினால் இன்றிருந்து வரும் தேசீய ஒருமைக்கு புதிய “இடையூறு” ஒன்றும் இல்லை. மொழிவாரிப் பிரிவினை தேசீயத்துக்குக் குந்தகம் விளைப்பது என்று கூறுவதானால் அது இன்றிருக்கும் மாகாணப் பிரிவினைகளாலும் அப்படி இருக்க வேண்டுமே! இதில் ‘சந்தர்ப்பங்கள்’ புதிதாக எங்குமுளைத்தன?

மாகாணச் சீரமைப்பு செய்யாவிட்டால் மன வருத்தம் ஏற்படும் என்று ஒப்புக்கொள்ளும் கமிஷன்—சீரமைப்பு நியாயம் என்று ஒப்புக்கொள்ளும் கமிஷன்—இந்த உணர்ச்சிகளுக்கு விரோதமாக ஏன் வாதம் செய்ய வேண்டும்? இது நமக்குச் சிறிதும் விளங்கவில்லை.

மொழிவாரிப் பிரிவினை இந்திய ஒருமையைக் குலைப்பதாகவே வைத்துக்கொண்டாலும், மொழிவாரி மாகாணப் பிரிவினை ஏற்படாவிட்டால் கமிஷன் தானே எதிர்பார்க்கும் பலவேறு மொழி மக்களின் ஏமாற்ற உணர்ச்சிகள் வலுக்குமல்லவா? அந்த நிலையில் அரசியல் ஐக்கிய பத்தியம் எங்ஙனம் நீடித்து நிலைக்க முடியும்? எப்படி மெய்யான ஒத்துழைப்பாக இருக்க முடியும்?

பாஷாவாரித் தொகுதிகள் தனித்தனி சிறு நாடுகளை சிருஷ்டிப்பதாகும் என்று கருதும் கமிஷன் தன் வியாக்யானப்படிக்கே இன்றுள்ள மாகாணங்களும் (எந்த அடிப்படையில் பிரிவு பட்டிருந்தாலும்) உப—தேசங்களாகத்தான் இருக்கின்றன என்ற “உண்மையை” ஏன் மறைக்க வேண்டும்?

“மாகாணங்களை மொழிவாரியாகப் பிரிப்பதால் ஒரே மாகாணத்திலிருக்கும் வெவ்வேறு மொழி பேசும் சிறுபான்மையினருக்கு எதிராக குரோத மனப்பான்மை ஏற்பட்டு விடும், இதன் மூலம் மாகாணப் பித்து ஏற்பட்டுவிடும்” என்று கமிஷன் கூறுகிறது. ஆனால் இணக்கமற்ற மாகாண அமைப்பினால் மாத்திரம் குரோத மனப்பான்மை வளராதா? மொழிவாரிச் சீரமைப்பு வேண்டுமென்ற கோரிக்கையே இத்தகைய குரோதங்களை அகற்ற வேண்டுமென்ற சுமுக மனப்பான்மையினின்று எழுந்ததுதானே! அல்லது ஒத்திருக்க முடியாத சூழ்நிலையில் பிரிந்துவிட வேண்டுமென்ற துடிப்பில் எழுந்ததுதானே.

எனவே மொழிவாரிப் பிரிவினையினால், தேசீய ஒருமைக்கு இடையூறு ஒன்றுமில்லை என்பதைக் கமிஷன் உணர வேண்டும். மொழிவாரிப் பிரிவினை தேசீய ஒருமையை எவ்விதத்திலும் பாதிக்காது. மொழிவாரிப் பிரிவினை வேண்டுமென்று கோருவோர், இந்திய ஒருமையில் நிலைத்த நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

மொழிவாரிப் பிரிவினை நிர்வாக ரீதியில் சங்கடமான காரியமாக இருக்கலாம். பிரிவினை முடியும் வரையில் பல கவலைகளும், நிர்வாகக் கஷ்டங்களும் ஏற்படலாம். ஆனால் ஆபரேஷன் வலிக்குமென்பதற்காக நோயாளியை வியாதியோடு விட்டுவிடுவது மருத்துவ தர்மமா? இல்லை. ஆபரேஷனை ஜாக்கிரதையாகவும், அன்புடனும், அக்கரையுடனும் செய்யவேண்டுமென்பதே விஷயம். கமிஷன் தன் அறிக்கையில் கண்டிருக்கும் பொருந்தாத வாதங்களை மீட்டுக் கொண்டு இந்த உண்மையை உணர வேண்டுமென்று எடுத்துக் காட்டுகிறோம். இல்லையெனில் மொழிவாரிப்பிரிவினையால் ஏற்படக்கூடியதாகக் கமிஷன் கவலைப்படும் குரோதங்களும் மாகாணப்பித்தும் ஆங்காங்கு போராட்ட வெறியாக வளர்வதற்கு வழிசெய்வதாகவே ஆகும்.

சிறு குறிப்புகள்

குடியரசுத் தலைவர்

தொடர்ந்த விவாதங்களின் பிறகு புதிய அரசியலமைப்பின் கீழ் இந்தியக் குடியரசின் ஜனாதிபதியை எங்ஙனம் தேர்ந்தெடுப்பது என்ற விஷயம் அரசியல் நிர்ண சபையால் முடிவு செய்யப் பட்டிருக்கிறது. மத்திய பார்லிமெண்டின் மேல் சபை, கீழ் சபை இரண்டுக்கும் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களும், மாகாணங்கள் சமஸ்தானங்கள் ஆகியவற்றின் கீழ் சபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களும் கொண்ட ஒரு எலக்டோரல் காலேஜ் இந்தியக் குடியரசின் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

இந்த முறைக்குப் பல ஆட்சேபணைகள் கிளம்பியது இயற்கைதான். ஏனெனில் ஜனாதிபதிக்கு புதிய அரசியல் அமைப்பின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் விசாலமானவை; மிகவும் பொறுப்புடன் கொண்டுசெலுத்தப்பட வேண்டியவை. எனவே நாட்டு மக்களெல்லோரும் சேர்ந்து ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று பலர் நினைக்கிறார்கள்.

அமெரிக்காவில் ஜனாதிபதி பொதுமக்களால் தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஜன சபைகளும், ஜனாதிபதியும் தனித்தனியே மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுவதில் சில லாபங்கள் இருந்தாலும், நஷ்டங்களும் உண்டு என்பதை சமீபகால சரித்திரம் நிரூபித்திருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் முதன் முறை ஜனாதிபதியாகத் தனித் தேர்தலில் பதவிக்கு வந்த காலத்தில் அவரது கட்சியான ஜன நாயகக் கட்சி சபைகளில் பெரும்பான்மையாயிருக்கவில்லை. எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சியே பெரும்பான்மை வகித்தது.

சட்டசபைகள் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் முறையில் இத்தகைய சிக்கல்கள் எழ இடமிருக்காது. ஜனாதிபதி கட்சிச்சார்பற்ற லட்சிய புருஷர் என்று மதிக்கப்பட்டாலும், அவருடன் ஒத்துழைக்கக் கூடிய மந்திரிசபை, சட்டசபை ஆகியவை நிர்வாக முறையில் இன்றியமையாத தேவைதானே.

முகப்பில்

இவ்வார முகப்பில் இந்தியாவின் புகழ்பெற்ற விஞ்ஞானி சி. வி. ராமனவர்களது படம் இடம்பெற்றிருக்கிறது. விஞ்ஞானி ராமன் பௌதீக சாஸ்திரத்தில் ஒளி சம்பந்தமான ஆராய்ச்சிகளின் பலனாய் நோபல் பரிசுபெற்று சர்வதேச முக்யத்துவம் அடைந்தவர். வைர ஆராய்ச்சிகளில் முதன்மை வகிப்பவர். சமீபத்தில் வெளிநாடு சென்று திரும்பி ஹாஸ்ய ரஸனையுடன் தம் அனுபவங்களைப் பல்வேறு இடங்களில் எடுத்துக் கூறி வருகிறார். சி. வி. ராமனுக்கு இந்திய அரசாங்கம் இதுகாறும் தக்க மரியாதை செய்து அவரது அறிவாற்றலைப் பயன் படுத்திக்கொள்ளவில்லை என்பது வருந்தத்தக்க விஷயம்.

பிள்ளைப் பிராயத்தில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு பயங்கரமான குழலோசையுடன் விரைந்து சென்ற ரயில் எஞ்சின் நாள் கணக்கில் அருகிருந்து வேடிக்கை பார்க்கக் கூடிய அதிசயப் பிராணியாகத் தோன்றியது. நகரத்தில் நடமாடும் யந்திர ஊர்திகளும் யந்திர சாலைகளும் துரைசாமி திரிந்து சென்று ஆராயும் வஸ்துக்களாயின.

மோட்டார் சைக்கிள் வாங்கும் லட்சியம் நிறைவேற வேண்டுமானால் அதற்கு நிறையப்பணம்வேண்டும் என்ற உண்மையைத் தெரிந்துகொண்ட சிறுவன் ஒரு ஹோட்டலில் மேஜை துடைக்கும் வேலையில் மாதம் 3 ரூபாய் சம்பளத்துக்கு அமர்ந்துகொண்டான் மூன்று வருஷத்திற்கு பிறகு தன் சேமிப்புத்தொகை சுமார் 400 ரூபாய்கள் என்று கண்ட துரைசாமிக்கு லட்சிய சித்தி வெகு அருகில் வந்து விட்டது. அந்த வெண்குஷ்ட துரையிடமே சென்று விலைபேசி அதே மோட்டார் சைக்கிளை வாங்கி சவாரியும் செய்து திருப்தியடைந்தார் என்றால் அவருடைய முயற்சியின் ஊக்கத்திற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

கையில் கிடைத்த மோட்டார் சைக்கிள் அவரிடம் என்னபாடு பட்டிருக்கு மென்பதைச் சொல்லவேண்டியதில்லை. முரட்டுத்தனமாகத் திரிந்துகொண்டிருந்த மூளைக்கு ஒரு போக்குக் கிடைத்தால் அதன் விளைவைச் சொல்லவும் வேண்டுமா?

யந்திர ஊர்தியை அக்கு வேறு ஆணிவேறாகக் கழற்றுவதும் கழற்றிய ஞாபகத்துடன் மீண்டும் பொறுத்திப் பார்ப்பதும் இப்படி அதன் ஒவ்வொரு மறையுடனும் உயிர்த்தொடர்பு ஏற்பட்டு விட்டது துரைசாமிக்கு.

துரைசாமி மெகானிஸ்ட் ஆகிவிட்டார். மோட்டார் சைக்கிளில் இப்படி முளைத்த மெகானிஸ ஆவல் இன்று அதில் நிபுணத்வம் படைத்து விளங்கும் ஜி. டி. நாயுடுவை நமக்கு அளித்திருக்கிறது.

தோட்டக்காடுகளில் திரிந்து இளைத்த அந்த நாட்களிலே தமிழ் தானே படித்துக்கொண்ட துரைசாமி பழைய இலக்கியங்களிலும் கூட நல்ல பரிச்சயம் ஏற்படுத்திக்கொண்டு விட்டார். அளவற்ற ஆற்றல் ஊறிக்கொண்டிருந்த இளம் உள்ளத்தில் எதிர்ப்பட்ட வியப்புகளெல்லாம் ஆராய்ச்சிக்கும் அது பற்றிய அறிவுக்கும் பாத்திரமாகி விட்டன. வெறுங் கதைகளும் நாவல்களும் அவர் விரும்பியதேயில்லையாம்.

துரைசாமி வளர்ந்து இல்லறப் பிணைப்பை ஏற்றுக்கொண்டார். ஆனால் தாலிகட்டும் சமயத்தில் மாப்பிள்ளையைக்காணோம். தோட்டத்துக் குடிசையில் தனி மூலையில் ஆளைக்கண்டு பிடித்தார்கள். அர்த்தம் தெரியாமல் எதையோ முணு முணுக்கும் அந்தப்புரோகிதர் எழுந்து போனால்தான் மணவறைக்கு வா முடியுமென்று பிடிவாதம் செய்துவிட்டார் மணமகன். கடைசியில் மந்திரமும் புரோகிதர் தலையீடுமின்றி மணமகளின் கழுத்தில் மஞ்சள் கயிறு கட்டினார், தானே சிந்தித்துத் தனக்குப்புலனுகும் முடிவுகளைமட்டும் ஏற்றுச்செயல்புரியும் அந்த இளம் சிந்தனையாளர்.

ஜெயபூர் கண்காட்சிக்கு

ஜெயபூரில் இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தை யொட்டி நடைபெறவிருக்கும் கண்காட்சியின் கல்விப் பிரிவுக்கு செவிடு, ஊமை, குருடு மாணவர்கள் கோஷ்டியொன்றை அவர்களுடைய உபாத்தியாயர்களுடன் கூட இந்தியசர்க்கார் அனுப்பி வைத்திருக்கின்றனர்.

இத்தகைய மாணவர்கள் கல்வி கற்கும் முறைகளையும் இவர்களுக்குக் கல்வி போதிக்கப்படும் முறைகளையும் இவர்கள் பொதுஜனங்களுக்கு பிரத்தியட்சமாக நடத்திக்காட்டுவார்கள்.

ஜெமினியின்

சக்ரதாரி

இப்பொழுது சென்னை கிரௌன், ஸ்டார் இரு தியேட்டர்களிலும் மற்றும் அநேக முக்கிய நகரங்களிலும் நடைபெறுகிறது.....

டைரக்ஷன்: கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

சுதந்திர இந்தியாவில் தேசீய கைத்தொழிலை ஆதரியுங்கள்!

கல் சிலேட்டுகள், சாதா, கிளச், ஸ்டோன் பாலிஷ் எல்லா சைஸ்களிலும் வியாபாரிகளுக்கு சப்ளை செய்யப்படும்.

பாபு இண்டஸ்ட்ரீஸ்

டவுன் ஸ்டேஷன் ரோடு, திருச்சினாப்பள்ளி.

பெங்களூர் காஞ்சிவரம் பட்டு சேலைகள் பனாரஸ் ஜரிகை புட்டா தார்பாளு சேலைகள், பேன்ஸி சில்க் வாயில் ரகங்கள், மில் ஜவுளிகள், கைத்தறி ஜவுளிகள், ட்வீட்டு சில்க் கோடிங் ஷர்டிங் முதலியவை விலை சகாயமாய் கிடைக்கும்.

SLATE MANUFACTURERS & FANCY PIECE GOODS & SILK CLOTH MERCHANTS

திருச்சி சப் கோர்ட்டு

BEZWADA SUB COURT

O. S. 30/47 E. P. 145/48

Katragadha Brothers, Bezwada represented by its Partner K. Madhusudhana Rao and another —வாதிகள்

K. ராமசாமி வகையரு

—பிரதிவாதிகள்

ஷை மெம்பர் 2-ம் பிரதிவாதிக்கு நோட்டீஸ்.

ஷை மெம்பர் வாதிகள் ஜப்தி செய்யப்பட்ட வாரியை ஏலத்திற்கு கொண்டுவர மனுக் கொடுத்து ஷை மனு ஏல இஸ்தியாரின் ஷரத்துக்களை ஸெட்டில் செய்ய 27-12-48 தேதி பகல் 11 மணிக்கு ஈரங்கி போடப்பட்டிருக்கிற தென்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

M. S. Sundara Rajan,

Plaintiff's Advocate.

16—12—48

திருச்சி டி. மு. கோர்ட்டு

O. S. 232/48

T. V. வெங்கடசுப்பையர்—வாதி

P. S. பஞ்சாபகேசய்யர் வகையரு

—பிரதிவாதிகள்

ஷை மெம்பர் வாதி பிரதிவாதிகள் பேரில் தி. தா. பாண்டமங்கலம் பூர்வீக வீடு பாகத்துக்கு தாவா செய்து ஷை தாவா ஈரங்கி 30-12-48 தேதி போடப்பட்டிருக்கிறது. 5-வது பிரதிவாதி T. S. சுப்பிரமண்யய்யர் இருப்பிடம் தெரியவில்லை. ஆக்ஷேபணை உண்டானால் ஷை தேதியில் ஷை கோர்ட்டில் தெரிவித்துக் கொள்ளலாம்.

(Sd.) M. K. ராமச்சந்திரய்யர்

வாதி வக்கீல்.

15—12—48.

சீனத்து சண்டை ஓய்கிறது

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வைத்துச் சுரண்டி வந்திருப்பவர்கள்.

ஆசியப் பிரதேசம் பூராவிலும் மேல் நாட்டினரும் அமெரிக்கரும் கொண்டிருந்த நூற்றாண்டுகளின் பொருளாதார அரசியல் ஆதிக்கம் கொஞ்சம் கொஞ்சமாக மாறிப்போய்விட்டது. இப்போது நடைபெற்று முடிந்த மகாயுத்தத்தின் விளைவாக ஜப்பான் மட்டும் இன்று நேராக மேற்றிசை வல்லரசுகளின் பிடிப்பில் சிக்கிக் கிடக்கிறது.

பார்க்கப்போனால் தனது பக்கத்து நாடான சீனாவின் உள்நாட்டு விவகாரங்களில் பொருளாதார ஆதிக்கமும்—அதன் மூலம் மறைமுகமான அரசியல் ஆதிக்கமும—படைத்த மேல் நாட்டினரை சீனாவைவிட்டு வெளியேற்றவேண்டும். என்ற தீவிரத்துடன்தான் ஜப்பான் அச்சுநாடுகளுடன் இந்த மகாயுத்தத்தில் சேர்ந்தது என்று சொல்ல வேண்டும். முன்பு 1937-ல் நடைபெற்ற சீன-ஜப்பான் யுத்தத்தின் அடிப்படை லட்சியம்கூட இதுதான். ஆயினும் பின்னர் ஜப்பானும் சீனாவை ஆக்ரமிக்க வேண்டுமென்ற பேராசையையும் கொண்டு விட்டது.

கம்யூனிஸ்ட்கள் சீனாவில் வலுப்பெற்று வருவதன் விளைவாக இப்போது ஏற்பட்டிருக்கும் சூழ்நிலை அமெரிக்காவுக்கு சாதகமாக இல்லை. சீனாவிலிருந்து அமெரிக்க ஆதிக்கமும்சரி வெளியார் ஆதிக்கமும்சரி வெளியேற வேண்டியதுதான். இதனாலேயே சீன உள்நாட்டுச் சண்டை கம்யூனிஸ்ட்களின் வெற்றியாக முடிந்துவிடாமல் குவோமிண்டாங்-கம்யூனிஸ்ட் கக்ஷிகளின் சமரஸமாக முடிந்துவிடக்கூடாதா என்ற ஆசை அமெரிக்காவுக்குத் தோன்றியிருக்கிறது. குவோமிண்டாங் கக்ஷியினர் அமெரிக்க உறவில் விருப்பமுடையவர்களேயாயினும் சீனாவின் தேசீய நன்மையை முன்னிட்டுப் பார்த்தால் அமெரிக்கப் பிடிப்பு அகலுவது ஒரு வெற்றியேயாகும். சீனாவின் வளர்ச்சிக்கு அமெரிக்கா உதவி செய்திருப்பது உண்மைதான் ஆயினும், இந்திய அரசியலில் பிரிட்டிஷார் ஆதிக்கத்தால் ஏற்பட்ட நன்மைகளுக்குத்தான் சமமாகும். ஆயினும் இந்த நன்மைகள் அமெரிக்க-பிரிட்டிஷ் சுயநலத் தூண்டுதலால் தவிர்க்க முடியாமல் சீன இந்திய நாடுகளுக்கு ஏற்பட்ட சொற்ப லாபங்களேயாகும்.

இன்றிருக்கும் நிலையில் குவோமிண்டாங் கட்சிக்கு உதவி செய்வது தங்களுக்கு இனி ஒரு லாபமும் தராது என்பதை அமெரிக்கா தெரிந்து கொண்டிருக்கிறது. காரணம் குவோமிண்டாங் கக்ஷி இன்று வலி குன்றிவிட்டது.

அமெரிக்க செல்வாக்கு அநேகமாக ஆசியாவிலிருந்து மீண்டுவிட்டது, இந்த அடிப்படையில் ரஷ்யாவின் செல்வாக்கு வளரவும் கூடும். இப்போதைக்கு வெகு சீக்கிரத்தில் சீன அரசியலில் பின் கண்ட மாறுதல்கள் ஏற்படலாம்:—

1) கம்யூனிஸ்டு—குவோமின்டாங் கட்சிகளிடையே சமரசம் ஏற்பட்டு சீனாவில் கூட்டு மந்திரிசபை அமைக்க முயற்சி செய்யப்படலாம். ஆனால் குவோமிண்டாங்கின் கை சளைத்திருக்கும் சமயத்தில் இத்தகைய சமரசம் சாத்தியமா என்பதே கேள்வி. ஏனெனில் கம்யூனிஸ்டுகள் நிச்சயமான முழு வெற்றியை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தக் காலந் தாழ்த்த சமரச யோசனை கவர்ச்சிகரமாக இருக்காது.

(2) அல்லது, கடைசிவரை போராட்டம் நடந்து முழு ஆக்கிரமிப்பு நிலைவரை வளரலாம்.

(3) சியாங்கே ஷேக் ராஜிநாமா செய்வதோ, செய்யாமலிருப்பதோ சீன அரசியலில் குவோமிண்டாங் கட்சிக்கு இன்றிருக்கும் ஸ்தானத்தை எவ்விதத்திலும் உயர்த்தமுடியாது எனவே குவோமிண்டாங் கம்யூனிஸ்டு நிபந்தனைகளின்படியே இந்த சமரசம் பூரணமாக உருவாகும்.

In the Court of the Subordinate Judge of Tiruchirapalli.

O. P. No. 127/1948.

Jamila Bibi, widow of Kamrudeen Saheb residing at Tiuverambur—1. Salia Bibi widow of Batcha Mian, mother of Kamrudeen at Tiruverambur—2, B. Sherfudin Sahib son of Batcha Mian Sahib at Tiruverambur—3.

—Petitioners.

Nil—Respondents.

To those concerned:—

Notice is hereby given that on 9—11—48 application was made to the above court by the Petitioners above named for the grant to them of a Certificate under Part X of the Indian Succession Act 1925, with respect to the debt mentioned in the above petition of the late Kamrudeen Sahib and that the 20th day of December 1948 has been appointed for the hearing thereof when you are at liberty to appear and oppose the same.

Trichy } T. S. Subramanian
2-12-48 } Pleader.

தந்தி விலாசம் :—'கோகுல்'
போன் நெ. 57

Estd. 1909
Branch : MANNARGUDI

கும்பகோணம்

டி. எஸ். ஆர்.

கம்பெனியின்

சந்தனாதித் தைலம், கோகுல் பாக்குப்பொட்டலம், அரைக்கீரைவிதைத் தைலம், கோகுல் வத்தி தினுசுகள் இவைகளை உபயோகியுங்கள்.

கோகுல்
கூந்தல் தைலம்

☞ தைலங்கள் கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றன.

எங்கள் ஆலிலை கிருஷ்ணன் டிரேட்மார்க்கை கவனித்து வாங்குங்கள்.

சென்னை நகரத்திற்கு சோல் ஏஜண்டுகள் :—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை

கோவை ஏஜண்டு :—
B. பாலபட்டாபி செட்டியார்,
246, வைசியாள்தெரு, கோயம்புத்தூர்.

பாத்ருடுவின்

பாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு
சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும் சிறந்த மருந்து.
58 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக் கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றி வருவதனால் டாக்டர்கள் இச் சஞ்சீவினியையே உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.
போலி மருந்துகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

டாக்டர் பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்—4.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில், கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.



✿ ஜெமினியின் பக்திரசம் ததும்பும் படமான சக்ரதாரி யைப்பற்றித்தான் இந்தஇரண்டு வாரகாலமாக எங்கு திரும்பினு லும் பேச்சாக இருக்கிறது. பக்த கோரா கும்பரின் கதை தான் சக்ரதாரி. இருந்தாலும் அதை அழகுபட அமைத்து பாவம் பொங்க நடித்து மிருப் பதுதான் குறிப்பிடத்தக்கது. கோராகும்பர் மண் துவைக்கும் போது குழந்தையையும்சேர்தது மிதிக்கும் கட்டத்தில் நம்மை யறியாது நம் உடல் குலுங்கி விடுகிறது. புஷ்பவல்லி இவ்வ ளவு அற்புதமாக வேறு எந்தப் படத்திலும் நடித்ததே இல்லை. நாகையாவின் பாவம் நிறைந்த பாடல்கள் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. நாரா யணராவின் ஹாஸ்யம் ரசிக்கக் கூடியது. சென்னை கிரௌன் சாகர் இரு தியேட்டர்களிலும் தமிழ்நாட்டில் பல முக்கியமான நகரங்களிலும் மக்களின் அமோக ஆதரவைப்பெற்று வரும் சக்ரதாரி ஆந்திரநாட்டில் பொங்கல் வெளியீடாக கிளம் பப்போகிருராம்.

✿ டைரக்டர் சுப்ரமணியத் தின் கவனமான பார்வையில் "கீதகாந்தி" மெருகு ஏறிக் கொண்டிருக்கிறதாம். டி. ஆர். ராமச்சந்திரனின் ஹாஸ்யம் ரசிகர்களின் வயிற்று வலிக்குக் காரணமாக இருக்குமோ என்று பயப்படவேண்டி இருக்கிறது.

பேபி சரோஜாவை தமிழ்ப் பட உலகுக்கு அறிமுகப்படுத் திய அதே சுப்ரமணியம் இன் னொரு குட்டி நட்சத்திரத்தை கீதகாந்தி மூலம் நமக்கு அளிக் கப்போகிருர். பேபி பத்மா பிரமாதமாக நடித்திருக்கிரு ராம். பி. எஸ். சரோஜாதான் கதாநாயகி.

✿ திரு என். எஸ். கிருஷ்ண னின் சமூகச் சித்திரமான தளபதி அண்ணுவின் நல்ல தம்பி அனேகமாக முடிந்த மாதிரிதானும். ஹாஸ்ய ரஸத் துடன் பல அரிய நீதிகளை போதிக்கப்போகிருராம் இந்த நல்லதம்பி. பொறுத்திருந்து பார்ப்போம்.

✿ ஆதித்தன் கனவு பல ஊர்களில் அமக்களமாக ஓடிக் கொண்டிருக்கிறதாம். சிந்தா மணியைப்போல ஜனரஞ்சக மான கதை. பிரபல நட்சத் திரங்கள் தங்கள் திறமை முழு தையும் அள்ளி வீசி இருக்கிருர் களாம். டி. ஆர். மஹாலிங்கம், டி. ஆர். ரஜனி, அஞ்சலிதேவி, கே. பி. கேசவன், பெருமாள் முதலியோர் இருக்கும்போது படத்தின் உயர்வைப்பற்றிச் சொல்லவாவேண்டும்.

✿ லாவண்யாவின் பாரி ஜாதம் வெகுவேகமாகவளர்ந்து வருகிறது. மஹாலிங்கம், பி. எஸ். சரோஜா முதலியோர் நடிக்கும் இதை ஏ. டி. கே. டைரக்ட் செய்கிருர்.

✿ சேலத்தில் எழும்பியுள்ள ரத்னு ஸ்டுடியோக்காரர்கள் தங் கள் சொந்தத் தயாரிப்பாக உதய நட்சத்திரத்தை பிடிக் கப்போகிருர்களாம். வி. என். ஜானகி, எம். ஜி. ராமச்சந்திரன், நம்பியார் முதலானேர் நடிக்கக் கூடுமென்று நம்பப்படுகிறது.

✿ ஸ்வதந்திரா பிலிம்சாரின் 'துரோகி' ஆந்திர நாடுகளில் திரையிடப் பட்டுவிட்டதாம். லக்ஷ்மிராஜ்யம், வரலக்ஷ்மி, பிர சாத் முதலியோர் அற்புதமாக நடித்திருக்கிருர்களாம். 'துரோகி' ஸ்வதந்திராவின் மகத்தான வெற்றிதானும்.

ஜெமினி 'சக்ரதாரியில்' நாகையா உருக்கமான காட்சியொன்றில் இப்படிக் காட்சியளிக்கிருர்.

✿ வெகு நாளாக ரசிகர்களின் பொறுமையை சோதித்துக் கொண்டிருக்கும் படங்களில் ஒன்றுன 'ஆண்டாள்' ஒரு தினுசாக முடிவடைந்திருக்கிற தாம். இனி அவரை வெளி யில் அனுப்ப நாம் பார்க்க வேண்டயதுதானும்.

✿ மேலே சொன்ன சோத னைப்படங்களில் 'மங்கையற் கரசியும்' ஒன்று. பலர் ஆரம் பித்து கைவிடப்பட்ட இதை டைரக்டர் நாகூர் பிடிவாதமாக வளர்க்கத்தொடங்கி விட்டார். விக்ரமாதித்தன் கதைகளில் ஒன் றுன 'காந்த ரூபன், காந்த ரூபி'க் கதைதானும இது.

✿ இதோ அதோ என்று வரு ஷக்கணக்காக ஸ்டுடியோவை விட்டு நகராமல் அடம்பிடித்துக் கொண்டிருக்கும் இந்த 'கிருஷ்ண பக்தரை' எப்படி யும் வெளியிலனுப்பி விடுவ தென்று தீர்மானித்து விட்டா ராம் 'லேனு'. சின்னப்பா, ராஜ குமாரி முதலிய நட்சத்திரங்கள் ஜ்வலிக்கும் இப்படம் தமிழ் நாட்டில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தப்போகிற தென்னவோ உண்மை

✿ ராகினியார் 'பக்த ஜனு' அளித்த வெற்றியின் சந்தோ ஷத்தில் 'தூக்குத் தூக்கியை' சுடப் போகிருர்களாம். கதை வசனம் ஏ. டி. கே. தான். இன் னும் நடிகநடிகைகளின் ஜாபிதா தெரிந்தபாடில்லை. 'ராஜஹம்சம்' என்ற படமும் வளரப் போகி றதாம். ஆனுல் இதுதெலுங்கு.

✿ 'டம்பாச்சாரி'யை அனே கர் மறந்து விட்டனர். அத னுல் சென்னை கெயிட்டி டாக் கீஸ் சம்பந்தப்பட்டவர்கள் 'டம்பாச்சாரி'யைத் தயா ரிக்கத் திட்டமிட்டிருக்கிருர்க ளாம். இது சம்பந்தமாக டைரக்டர் சுப்ரமணியத்தின் பெயரும் அடிபடுகிறது.

✿ இப்போது எந்தப் புதுப் படமானுலும் டி. ஆர். மஹா லிங்கத்தின் பெயர் அடிபட ஆரம்பிக்கிறது. மகாலிங்க மார்க் கெட் இப்போது. லைலாமஜ்னு, காளிதாசன் இதிலெல்லாம்கூட மகாலிங்கம்தான் என்பது உங்களுக்குத்தெரியாதாஎன்ன?



'நதியின் முடிவு' என்ற படத்தில் இந்திய நடிகர் சாபுவும், பிபி பேரோவும் ஆலோசனை செய்யும் கட்டம்.

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு

GURU TIGER PILLS

குருடைகர் மாத்திரை

காலராவுக்கு
கைகண்ட நிச்சய நிவாரணி!

14 அணு

குரு களிம்பு

Guru Ointment.

பத்து, படை சகல
சர்மரோகங்களுக்கும்
ஏற்ற நிவாரணி

விலை அணு 14.

டாக்டர்.ஏ.மதுரம் ஸன்ஸ்
திருமருந்து சாலை.. திருச்சிராப்பள்ளி.

சலவைக்கு சிறந்த சோப்

J. 101

பலர் உபயோகித்து சிறந்த
பலனை கண்டார்கள்

வெள்ளை, நீலம் — இந்த
நிறங்களில் செய்யப்படுகின்றன

ஒவ்வொரு வீட்டிலும் தின
கால உபயோகத்திற்கு அவ
சியம் வேண்டியது.

J. 101-பார் சோப்புகள்

வியாபாரிகளுக்கு தனி
சலுகை உண்டு. விவரங்
களுக்கு எழுதவும்.

ஜோதி சோப் ஒர்க்ஸ்,
கரூர்.

J. 101 மார்க்
பார்த்து வாங்கவும்.

டோங்ரேயின்—
பாலாம்ருதம்
குழந்தைகளுக்கு
பிரசித்திபெற்ற டானிக்

சிறு கதை

பொல்லாத மனம்

எம். எஸ். ராஜன்

அத்தனை இரைச்சலும் என் செவிக்கு எதும் அருவருப்பு கொடுக்கவில்லை. போவோரும் வருவோரும் வண்டி கிளம்பிவிடுமோ என்ற பீதியில் வண்டியில் இடமிருக்கிறதா என்று நாலா மூலைகளுக்கும் கண்களை ஊடுருவ விட்டு ஓடிச் செல்வோரும் என் கண்களில் பட்டார்களே தவிர என் கருத்தில் படவில்லை. இத்தனைக்கிடையில் அடுத்த இரண்டு மணி நேரத்தில் நான் எங்கு இருப்பேன், எப்படி எப்படி நடக்கும் என்று என் மனம் எண்ணிப் பார்த்துக்கொண்டிருந்தது. அடிக்கொருதரம் அவர் வருகிறாரா என்று எம்பி எம்பி பார்த்துக்கொண்டிருந்தேன். அவர் 'ஐஸ்கிரீம்' வாங்கி வருவதற்காகச் சென்றிருந்தார்.

அம்மாவிடம் சொல்லிக்கொண்டு புறப்படும்போது அழக்கூடாது என்று தான் திடமாயிருந்தேன். ஆனாலும் அவள் முகத்தைக் கண்டதும் தேம்பல் எங்கிருந்தோ வந்துவிட்டது. "ராணி, இங்கெல்லாம் இருந்ததுபோல் அங்கு இருக்கக்கூடாது. உன் விளையாட்டுத்தனத்தை எல்லாம் காட்டாமல் நல்ல பெயர் எடு. நான் வேறு எதும் உனக்கு சொல்ல இல்லை" என்று கூறிவிட்டு அன்போடு அணைத்துக்கொண்டாள். அவள் முதுகு ரவிக்கையெல்லாம் நனைந்துவிட்டது என் அழுகையால். சானிஇருக்காளே அவள் கூட அன்று அழுதாள். எப்பவும் என்னைக் கண்டால் பிடிக்கவே பிடிக்காது. எனக்கு இரண்டு வயது சிறியவள். ஆனாலும் அவளுக்கு அடக்கம்தான் நான் அகத்தில். அப்பா பேச முடிந்திருந்தால் எத்தனையோ சொல்லி ஆறுதல் செய்திருப்பார். ஆனால் 'பாரிச வாயுவால்' படுத்த படுக்கையாகிவிட்டபோது, கடவுள் அம்மாவின் மாங்கல்யத்தைக் காக்க மனது வைத்தானே தவிர அப்பாவின் நாக்கை இழுப்பதில் தான் திருப்தி கொண்டான்.

அப்பா 'போ...பா' என்று ஊமை போல் கூறினாலும் அதில் எத்தனை அர்த்த புஷ்டி என்பது அவர் வயிற்றில் பிறந்த எனக்கல்லவா தெரியும். அவர் நீட்டிய காலில் விழுந்து 'ஓ' என்று கதறிவிட்டேன். கையால் அணைக்கக் கூட சுதியற்றுவிட்டார்.

இத்தனை அமர்க்களத்தில் 'அவருக்கு' மனது மாறியதில் ஆச்சர்யம் எது மில்லை. "மாமி எதுக்கு நீங்கள் எல்லாம் இப்படி வருத்தப்படறேள். ராணியை சந்தோஷமாக அல்லவா அனுப்பணும். நான் வேண்டுமானால் அடுத்த மாதம் கூட்டிப் போகிறேன் ...நான்...நீ..." என்றதைக் கேட்டதும் என் அழுகை எங்கேயோ போய்விட்டது. என்ன சொல்வது என்று தெரியாமல் எழுந்து நின்றேன். அம்மா தன்னை நிதானித்துக்கொண்டு, "அதெல்லாம் ஒன்றுமில்லை. ராணி புக்ககம் போவதில் எங்களுக்கு என்ன வருத்தம். ஒரு நிமிடம் கூட பிரியாதவளை பிரிவது என்றவுடன் மனது சங்கடம். ராணி, அழக்கூடாது, போய்வா. ஜாக்கிரதை" என்றாள்.

நானும் சமாளித்துக் கொண்டேன். அம்மாவையும் சானியையும் பார்த்து "அப்பாவை பார்த்துக்கோங்கோ" என்று சொல்லி வண்டியில் ஏறி உட்கார்ந்தேன். எங்கள் தெருவே என்னை வழி அனுப்புவதில் வருத்தப்பட்டது போலிருந்தது. அடுத்தாத்து ரேவதி, நாராயணி எல்லோரும் வருத்தம் கலந்த சிரிப்போடு தான் என் அருகில்வந்து வழி அனுப்பினர். ரேவதி மட்டும் "ராணி எங்களை மறந்துடாதே, பாட்டி சொன்னது......ஜாக்கிரதை. கடிதம் போடு" என்றாள். ஏதேதோ குழப்பத்தில் இருந்த என் மனம் டக்கென நின்றது.

அவர் வெளியே பார்த்தபடியே இருந்தார். வண்டி மேட்டிலும் பள்ளத்திலும் ஏறி இறங்கி ஓடிக்கொண்டிருந்தது. பாட்டி சொன்னவைகள் ஞாபகத்திற்கு வந்தன. ரேவதியின் பாட்டி தன் புக்கக அனுபவத்தைச் சொன்னாள். ஆறுவயதில் கலியாணமாம் அவளுக்கு. ஏழு எட்டு வயதில் புருஷனாத்துக்கு வந்தாளாம். மேலாக்குகூடகிடையாது. பாவாடை சட்டைதான், உடம்பில். செல்லமாக வீட்டில் வளர்ந்தவள். ஒன்றுமே புரியாமல் தலைகீழாக இருந்தது. வந்து ஒரு வாரம் வரை வீட்டு நினைவுதானாம். அழுது அழுது அவள் மாமியாருக்கு கோபம் வரும்படி செய்துவிட்டாள். ஏற்கனவே மாமியார் வாயாடின்னுபேரு. அவளுக்குஇவள் அழுகை எரிகிற நெருப்பில் எண்ணை கொட்டியது போலாயிற்று. "நன்னாருக்கடி. வந்து வாரக்கணக்கிலாச்சு. நன்னா ஒப்பாரிக்கு பழகிண்டிருக்கே. ஒங்கம்மா இதுக்குத்தான் பழக்கினாளோ" என்றாள். பிறகு அவள் அழவேயில்லையாம். பயந்து பயந்து தானே எல்லாவேலையும் செய்வாளாம். இருந்தாலும் மாமியாருக்கு மாத்திரம் எதானும் கத்துவதற்கு அகப்பட்டுவிடும். "ஏண்டி அவாத்து திணத்திலே கயிற்றை போட்டுட்டியாமே. கொஞ்சமாவது பயமிருக்கணும். அதுக்குள்ளேயும்போய் கதை பேசஉட்கார்ந்துட்டியா. இதை உங்க அம்மா வந்து செய்வாளா?"

'கொஞ்சம் முதுகை பிடிடி, அதுக்குன்னு பிராண்டி தள்ளி விடாதே!' இம்மாதிரி பாணங்கள் வந்தவண்ணமாயிருக்குமாம். பாவம் எங்கே சென்று சொல்வது. விபரம்தெரியாத பருவம். இப்படி பயந்து பயந்து, நாளைவரையில் பாட்டியிடம் தைரியம் என்பதே மருந்துக்கும் கிடையாதாம். பாவம் பாட்டி எனக்கு சொன்ன புத்திமதியிலேதான் எத்தனைதரம் 'கெட்டிக்காரத்தனமாக நடந்துக்கோ உன் புருஷன் உன் பக்கம் இருக்கும்படி பாத்துக்கோ. மாமியாரோடே அனாவசியமாக சண்டைவளத்துக்காதே' என்று சொல்லியிருப்பாள்.

'பட்டென்று' என் துடையில் தட்டியபோதுதான் நான் நினைவுக்கு வந்தேன். வண்டி ஒரு மேட்டில் ஏறி இறங்கியதில் நான் அவர்மேல் போய் சாய்ந்தேன். அப்படியே ஏற்பட்ட உணர்ச்சி...ம். ஆனால் மறு நிமிடம்.

"ராணி என்ன அப்படி யோஜிச்சுண்டுவரே!" என்றபோது நான் திருதிருன்னு முழிச்சேன். அவருக்கு எப்படித்தெரியுமோ என்னவோ, "புக்காத்திலே மாமியார் கொடுமையைப்பற்றி யோசித்துக்கொண்டு வாயாக்கும்," என்றார். அசட்டு சிரிப்போடு தலையை ஆட்டிவைத்தேன் இல்லை என்று. அதற்கப்புறம் என் மனம் நிலைத்து அதைப்பற்றி எண்ண முடியாதவாறு செய்து விட்டார். அவர் கையை என் உடம்பிலிருந்து அகற்ற முயன்றதில் என் மனம் எப்படி யோசிக்கும்.

'ஜிலீர்' என்று என் கையில் ஏதோபட்டதும் திரும்பினேன். அவர் ஐஸ்கிரீமுடன் நின்று கொண்டிருந்தார். "மறுபடியும் தீவிர யோசனையா," என்று சலித்துக்கொண்டார். ஐஸ்கிரீமை ருசிபார்க்க ஆரம்பித்தேன். வண்டியும் மெதுவாக நகர்ந்தது. 'கசமுச சப்தங்கள்'நின்று வண்டியின் கடக் கடக் என்ற சப்தம் தான் கேட்டது. மறுபடியும் அவர் திருவிளையாடலுக்கு ஆரம்பித்துவிட்டார். ஐயோ வெட்கம். ரயில் வண்டியில் நாலுபேருக்கு நடுவில் கன்னத்தைப் பிடித்துக் கிள்ளுவதும், கையைபிடித்து அழுத்துவதும் கொஞ்சம்கூட வெட்கமே இல்லை இவருக்கு. எனக்கு சமயத்தில் எரிச்சல்கூட வந்தது. நல்லவேளையாக இறங்க வேண்டிய இடமும் வந்தது.

மாமியார் 'பிளாட் பார'த்திலேயே நின்று கொண்டிருந்தார். நாங்கள் எதிர் பார்க்கவேயில்லை. எங்களை வண்டியில் கண்டதுமே அவள் முகம் மலர்ந்தது. வண்டியிலிருந்து இறங்கியதும் என்னை அன்போடு அணைத்துக்கொண்டு "ராணி சௌக்யமா! ஏது ரொம்ப இளைத்துவிட்டாய்" என்றுகேட்டாள். வேலையாள் சாமான்களை தூக்கிக்கொண்டான். வீட்டு மாட்டு வண்டி வந்திருந்தது. அம்மா தன் பிள்ளையைப்பற்றி கவலைப்படவேயில்லை. நாங்கள் வீடுபோய் சேர்வதற்குள் "ராணி, ராணி" என்று நூறுதரம் விசாரித்துவிட்டாள் என்னை. அவர் கேட்டார் "ராணி, மாமியார் எப்படி' என்று. "நல்ல மாமியார்" என்று பதிலளித்தேன் உள்ளத்தில் உற்சாகத்துடன். உண்மையிலேயே என் மனதுதான் பொல்லாதது.

பரிசுகள் வேண்டாம்

இளவரசி எலிஸபெத்தின் குழந்தைக்காக உலகின் பல பாகங்களிலிருந்து வந்த பரிசுகளெல்லாம் திருப்பி அனுப்பப்பட்டுவிடும். பிரிட்டிஷ் அரச குடும்பத்தினர் பரிசுகளைப் பெற்றுக் கொள்ளும் வழக்கமில்லையாதலால் இளவரசி சிலவற்றைத்தான் அன்பின் அடையாளமாக வைத்துக்கொள்ளுவார்.

அமிர்தாஞ்சன்
சகல வலி நோவுகளுக்கும்
கைகண்ட மருந்து
எங்கும் கிடைக்கும்
அமிர்தாஞ்சன் லிமிடெட்.,
சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர்.

எங்கும் கிடைக்கும்

மோட்டார் பிராண்ட் — நீலகிரித் தைலம்



தயாரிப்போர்:—

ராஜம் & கோ

14 டபுள் தெரு,

சோழவந்தான், S. I Ry

ரேகை சாஸ்த்திரம்

"சிவதாஸன்"

பாரத நாட்டில் மிகவும் பழமையான, ஆதாரமுடன் கூடின அநேக சாஸ்திர நூல்களில் ஹஸ்தரேகை சாஸ்திரம் ஒன்று. பல மகான்களும் திருக் விவேகிகளும் மிக்க அனுபவத்தின்பேரில் எழுதிய பொன் மொழிகள் ரேகை சாஸ்திரம். இது சீனுவிலும் பல நூற்றாண்டுகளாக பழமை பெற்றிருக்கிறது. இங்கிலாந்திலும், கடந்த சில நூற்றாண்டுகளாக அநேக மகான்கள் இந்த நூலைப்பற்றி மிகவும் விஸ்தாரமாகவும், ஆதாரமுடனும் பல புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அமெரிக்காவிலும் இந்நூல்பற்றி இன்னும் அநேக ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. இதற்காக ஒரு தனி சங்கமும் அமைத்திருக்கிறார்கள். நம் நாட்டில், நமது முன்னோர்கள் ரேகை சாஸ்திரத்தை கடவுளின் அருளின் அம்சத்துடன் கலந்து எழுதி உள்ளனர். கிருகங்களின் அமைப்பினுல்தான் ஒருவருடைய குணங்கள் அமைகின்றன என்றும் வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது என்றும் கிரகங்களுக்கு பூஜை முதலியவைகள் செய்வதினுல் தாழ்வில் இருப்பவர்களுக்கு விசேட பலன்கள் வரும் என்றும் ஆதாரமுடன் கூறியுள்ளனர்.

தற்காலத்தில் அநேகம் பேர்கள் ரேகை சாஸ்திரம் பொய் என்று கூறுகின்றனர். இது இவர்களின் அறிவு இல்லாத தன்மையைத்தான் விளக்குகிறது. ஏனென்றால் ரேகை சாஸ்திரம் பல தேசங்களில் பல நூற்றாண்டுகளாக லட்சக்கணக்கான பேர்களால் பரிசோதிக்கப்பட்டு அந்த பரீட்சைகளில் தேறியிருக்கிறது. இன்னும் சிலர், சொல்லுகிறார்கள். "ரேகைகளின் மூலம் சென்ற காலத்தைப்பற்றி சொல்லமுடியும். ஆனல் வருங்காலத்தைப்பற்றி நிச்சயமாகச் சொல்லமுடியாது. ரேகைபார்க்கும் நிபுணர், உண்மையிலேயே படித்தவராயும், பணத்திற்கு ஆசைப்படாதவராகவும் இருந்தால் சென்ற காலத்தைப்பற்றி எவ்வளவு நிச்சயமாக கூறமுடியுமோ அதே நிச்சயத்துடன் வருங்காலத்தைப்பற்றியும் சொல்லமுடியும். அந்த பலன்கள் உண்மையாகவும் இருக்கும்" என்று.

ரேகை சாஸ்திரம் என்பது ரேகைகளிலிருந்து பலன்கள் சொல்வது மட்டுமல்ல ஒருவருடைய குணதிசயங்களைப்பற்றிகூற வேண்டுமானுல் கைகளிலிருந்து மட்டும் சொல்லிவிடமுடியாது. அவர்களின் நடைமிகவும் முக்யமானது. உதாரணமாக அவர் நடக்கும்விதம், கைகளை வைத்துக்கொண்டு போகும் பாவனை, இவைகள் முக்யம். நடைகள் கம்பீரமாகவும், சங்கிலிபோல் பின்னலாகவும், ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டும், குனிந்த தலைநிமிராலும் இருப்பதை நாம் பார்க்கிறோம். தவிற, நடக்கும் பெழுது கைகளை மூடிக்கொண்டு வீசிக்கொண்டு நடப்பவர்கள், விரல்கள் திறந்தபாவனையில் நடப்பவர்கள், கைகளை பின்னல் கட்டிக்கொண்டு நடப்பவர்கள், கைகளை கழுவும் மாதிரி முன்னல் கட்டிக்கொண்டும், கைகளை உடைகளில் மறைத்துக் கொண்டும், கைகளை பாதி தூக்கிக்கொண்டு அந்தரமாகவும் இன்னும் பலவகைகளில் நாம் பார்க்கிறோம். இவை ஒவ்வொரு விதத்திற்கும் தனி குண விசேடங்கள் உள. சிலவற்றைப்பற்றி கவனிப்போம்.

இரண்டு கைகளையும் பின்பக்கமாக கட்டிக்கொண்டு நடப்பவர்களை பார்ப்பது விசேடம். இவர்கள் சமூகத்தில் முக்யமானவர்களாகவே இருப்பார்கள். மிகவும் ஆராயும் தன்மையுடையவர்களாயும், சாந்த குணமுள்ளவர்களாகவும், அதீத ஞான முள்ளவர்களாயும், விசேட ராஜ தந்திரிகளாகவும் விளங்குவார்கள். சாதாரணமாக எவரும் ஒரு விஷயத்தை ஆழ்ந்து யோசித்துக் கொண்டு மாடியிலோ வரந்தாவிலோ உலாவும்பொழுது அவர்கள் அறியாமலே கைகளை பின்பக்கம் கட்டிக்கொண்டு நடப்பதை நாம் பார்க்கலாம்.

இரண்டாவதாக கைகளை கழுவும் மாதிரி கைகளை மாற்றிக்கொண்டு நடப்பவர்கள். இம்மாதிரி மனிதர்களைப்பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. இவர்கள் ஆடம்பரமாகவும், பொய்யராகவும் இருப்பவர்கள். மிக்க சூழ்ச்சியுடன் பிறரை தந்திரமாக ஏமாற்றும் குணமுள்ளவர்கள். இவர்களிடம் மிகவும் முன் எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது நலம்.

மூன்றுவது இரண்டு கைகளின் விரல்களும் திறந்த பாவனைகளில், சுமாராக கைகளை வீசிக்கொண்டு நடப்பவர்கள். இவர்களிடம் மன உறுதியும் திட சித்தமும் காண முடியாது. அந்தரங்க விஷயங்கள் தங்காது. ரகசியமான சமாசாரங்களைப் பற்றி இவர்களிடம் சொல்வது மிக்க ஆபத்தாக முடியும். தவிற இவர்கள் மிகவும் செலவாளிகளாகவும் இருப்பார்கள். செல்வம் இவர்களிடம் தங்குவதில்லை இம்மாதிரி மனிதர்கள் ரேகை நிபுணர்கள் சொல்லும் எச்சரிக்கையைப் பின்பற்றி நடப்பது மிகவும் முக்கியம்.

மற்ற விதங்களைப் பற்றியும் கைகளின் அமைப்பைப் பற்றியும் அடுத்தவாரம் கூறுகிறேன்.

தாம்பூலத்திற்கு

மைதீன் புகையிலை மேலானது

E. S. MYDEEN & Co.

இஸ். மைதீன்

TRADE MARK

KUMBAKONAM.

துறையூர் டி. மு. கோர்ட்டு

O P. 54/1948

மனுதார்:— பழனியாண்டி பண்டாரம்

12—9—1946 தேதியில் இறந்து போன சிக்கித்தம்பூர் மஜரு புதுர் பார்வதி அம்மாளுக்கு ராஜு செட்டி எழுதிக்கொடுத்திருக்கிற ரூ. 350—0—0 உள்ள பிராமிசரி நோட்டின் அசல் வட்டியை மனுதார் வசூலிக்க வார்சு சர்ட்டிபிகேட் கிடைக்க மனுதார் மனுக்கொடுத்து 20—12—48 தேதி போடப்பட்டிருப்பதால் ஆக்ஷேபனை உள்ளவர்கள் அன்று ஆஜராகி தங்கள் கக்ஷியைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியது.

Turaiyur 11-12-48 } V. R. Avadhani Pleader.

வயிற்றுக் கோளாறுகளை ஆப்ரேஷன் இல்லாமல் சுகப்படுத்தக் கூடியது. சிறந்த

முப்பு சூரணம்

இந்த சூரணம் 30 வருஷ காலமாய் அனுபோகமுள்ளது. பத்தியம் கிடையாது. முப்புவினுல் தயாரிப்பு, வயற்றுப்புண் அஜீரணம் மல சிக்கல், வயற்று குமட்டல், வாந்தி, மயக்கம், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் வரும் வயறு நோவுதல் குடல் கொந்தளிப்பு மேக சம்மந்தமான வியாதிகளையும் போக்கும்.

4 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3.

-(தபால் சிலவு தனி)-

Dr. R. P. சாரதி,

மகாத்மா காந்தி சித்த வைத்யசாலை

தர்மராஜா கோயில் தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, மதருஸ்

திருச்சி டி. மு. கோர்ட்டு

O. S. 267/45

I. A. 585/48

முத்துவீரம செட்டியார் —வாதி

வீரமலை மூப்பன் —பிரதிவாதி

வாதி கொடுத்த நோட்டீஸ்

ஷை நெம்பரில் பைனல் டிக்ரி செய்ய மனுக்கொடுத்து ஷை மனு 29—12—48 தேதி போடப்பட்டிருக்கிறது என்பதை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(Sd) N. P. Kalyanasundara Mudaliyar, வக்கீல்.

ஸைக்கிள்கள்

தினம் சைக்கிள் மீது ஏறி ஆனந்தமாக சவாரி செய்கிறீர்களே. இந்த சைகிளைப் பற்றி சில ரசமான விஷயங்கள் உங்களுக்குத் தெரியுமா?

முதன் முதலில் பைசிகிளை கண்டுபிடித்த பெருமை ஸகாட்லாந்து தேசத்தவராகிய மாக்மில்லனைச் சேரும்.

தற்போது உலகத்தில் சுமார் 70,000,000 சைகிள்கள் இருக்கின்றன.

பிரிட்டனிலிருந்து இவ்வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களில் மட்டும் ஏற்றுமதி செய்யப்பட்ட சைகிள், சைகிள் பாகங்களின் மதிப்பு 13,015,603 பவுன்கள் என கணக்கிடப்பட்டிருக்கிறது.

இங்கிலாந்தில் சைகிள் உபயோகிக்கும் 10,000,000 பேர்களில் 100000 பேர்கள் சைக்கிள் கிளப்போ அல்லது சங்கத்தையோ சேர்ந்தவராவார்கள்.

சூதகத்தை நிறுத்தியது.

குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்த வல்லது. தீமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தியளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். விலை ரூ. 3 நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5 மிக்க கடுமையான கோளாறுகளுக்கு ரூ. 8 கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலை ரூ. 4

(வி. பி. க்கு 12 அணு அதிகப்படி.)

Mrs. P. DEVEE, F.D.S. (S)

Tollygunge, CALCUTTA.

Stockist:—HARRY & SON,

93, ChinaBazaar Rd., MADRAS.

வெற்றிகரமான 2-வது வாரம்

இனிய கானம்—இன்ப நடனம்
பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத
-: கதைப்போக்கு :-

மாடர்ன் தியேட்டர்ஸின்

ஆதித்தன் கனவு

T. R. மகாலிங்கம், அஞ்சலிதேவி
முதலியோர் நடித்தது

சென்னை	—	பிரபாத்	... ...
		ஸரஸ்வதி	... ...
		ஸன்	... ...
மதுரை :	—	சிந்தாமணி	... ...
கோயமுத்தூர்	—	ராஜா & டயமண்ட்	...
சேலம் :	—	அம்பிகா	... ...
தஞ்சாவூர் :	—	நியூ டவர்	... ...
காரைக்குடி :	—	நடராஜா	... ...
வேலூர் :	—	தாஜ்	... ...
காஞ்சிபுரம் :	—	முருகன்	... ...
புதுச்சேரி :	—	ரத்னா	... ...
நாகர்கோயில்	—	பயோனீர் பிக்சர் பாலஸ்	
பாலக்காடு :	—	நியூ தியேட்டர்	...

டைரக்ஷன் **T. R. சுந்தரம்,** B. A., B. Sc., (Leeds)

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட் சேலம் & மதுரை.

Printed at the Trichinopoly United Printers Limited., Trichinopoly, and Published by Thiruloka-Sitharam (Editor).